Demographic Training Institute

* 363 *Q.*—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Health be pleased to state whether there is any proposal under the consideration of the Government to request the Central Government to open a Demographic Training Institute in Tamil Nadu?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, மக்கள் தொகைப் பெருக்கத்தைப்பற்றிப் பயிற்சி பெற வேண்டுமானால் இப்பொழுது இந்தியாவிலேயே பம்பாய் நகரத்திலுள்ள டெமொக்ராஃபிக் ட்ரெயினிங் இன்ஸ்ட்டிட்யூட்டுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, தமிழ்நாட்டில் இப்படிப்பட்ட ஒரு நிலையத்தை ஏற்படுத்தும்படி நமது அரசு மத்திய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, பல பேர் பணியாற்றுகின்ற அந்தப் பணியினுடைய புள்ளிவிவரங்களை ஒருவரேகூட சேகரித்துவிட முடியும். இப்பொழுது அதற்குத் தேவையான அளவு பயிற்சியுடையவர்கள் இருக்கிறார்கள். பலரும் பயிற்சி பெறச் செய்தால் அதற்குப் பின்னர் வேலை தரவேண்டு மென்ற கட்டாயத்தை அவர்கள் எழுப்புவார்கள். ஆகவே, இது மிக அவசியம் என்ற கருத்து அரசால் ஏற்கப்படவில்லை.

வெறிநாய்க் கடிக்கான மருந்து தயாரிப்பு

* 364 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெறி நாய்க் கடி நோய்க்கான மருந்து தயாரிக்கும் திட்டம் ஏதேனும் செயல்படுத்தப்பட இருக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) வெறிநாய்க் கடிக்கான மருந்து கூனூரில் பாஸ்டர் நிலையத்திலிருந்து ஏற்கனவே தயாரிக்கப்பட்டு கிடைத்து வருகிறது. இதைத் தவிர அம்மருந்து தயாரிப்பதற்கான வேறு செயற்குறிப்பு எதுவும் இல்லை.